[2nd November 1966

**திரு. எம். எஸ். மணி :** நகர எல்லேக்குள்ளே ஓடுகிற பஸ்களேப் பொறுத்த வரையில், நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். நகராட்சி மன்றங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தக் கூடாது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியானுல், தனியார்கள் நகர பஸ் சர்விஸ் நடத்தி நஷ்டப்படுகிருர்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிருர்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியார்களுடைய கணக்கு களேப்பற்றி நான் அபிப்பிராயம் கூறுவதற்குத் தயாராக இல்லே. ஆனுல், தனியார் யாரும், நகரங்களில் மாத்திரம் பஸ் சர்விஸ் நடத்தி, 'மொஃபஸல்' பஸ் ஸர்விசையும் சேர்த்து நடத்தாவிட்டால், அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும். இதற்கு உதாரணம், ஏற்கனவே இதுபற்றிய விவாதம் நடந்தபோதுகூடச் சொன்னேன். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில் நடந்த ஃபிஃப்த் அவென்யூ கோச் கம்பெனியும் ஏறக்குறைய தனியார் துறைதான், நஷ்டத்தில் ஓடி அது திவால் ஆகிவிட்டது, நகராட்சி ஏற்றுக்கொண்டு நடத்துகிறது என்று சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கொள்கையை உத்தேசித்து, நகரங்களில் ஓடுகிற பஸ்களேச் சர்க்கார் ஏற்று நடத்துவதற்கு முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுதான் கொள்கை, எந்த எந்த நகரங்களில் அவசியம் என்று கருதப்படுகிறதோ, அங்கே சர்க்கார் நடத்துகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நமது சென்னே நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கிற சர்க்கார் பஸ் லாபத்தில் ஓடுகிறதா ? நஷ்டத்தில் ஓடுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பல முறை இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. நகரத்தில் ஓடுகிற பஸ்களெல்லாம் நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொன்னுல், சென்னே நகரமும் அதனுள் அடங்கியிருக்கிறது.

*State Transport buses between Madras and Polur*

* 313 *Q*.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government propose to ply two State Transport buses on each of the following routes between Madras and Polur (i) via Kancheepuram, Cheyyar and Chetpet and (ii) via Chingleput, Uttiramerur, Wandiwash and Chetpet?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லே.

*Provision of shelters at bus stops in City*

* 314 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Transport Department has proposed to provide shelters at all the bus stops in Madras City?